
Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

WEDNESDAY, JANUARY 1, 2025


www.tamilmirror.lk

# தமிழ்Mirror



ஏமது வாசகர்களுக்கு
இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

புதன்கிழமை, 01 ஜனவரி 2025 | ஒளி: 10 கதிர்: 127 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE



### தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் சர்ச்சை:

# உயர்நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு

2024 செப்டெம்பர் 15, அன்று நடத்தப்பட்ட தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் முதலாம் வினாத்தாளில் நேர்மையை மீறியதன் மூலம் மாணவர்கள் மற்றும் மனுதாரர்களின் அடிப்படை உரிமைகள் அரசால் மீறப்பட்டுள்ளதாக உயர் நீதிமன்றம் செவ்வாய்க்கிழமை (31) அறிவித்துள்ளது.

மூன்று வினாக்களுக்கான விடைகளும் இலவச புள்ளிகளை வழங்குவதற்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானம் சட்டவிரோதமானது என நீதியரசர்கள் யசந்த கோதாகொட, குமுதினி விக்ரமசிங்க மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்ற மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் மேலும் அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2




## இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

மலரும் 2025ஆம் ஆண்டு புத்தாண்டுக்கு ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, பிரதமர் கலாநிதி ஹரின் அமரசூரிய, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உள்ளிட்ட அரசியல் தலைவர்கள் தங்களுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர். எமது வாசகர்களுக்கும் தமிழ்மிரர் சார்பில் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

(வாழ்த்துச் செய்தி P3)

### 2025 ஒதுக்கீட்டுச் சட்டமூலத்துக்கு

## அமைச்சரவை அங்கிகாரம்




நாட்டின் 2025 நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தைத் தயாரிப்பதற்காக 2024.11.25 அன்று இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க, சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள 2025 நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றுள்ளது.

தொடர்ச்சி P2

## பாற்சோறு இல்லாத புத்தாண்டு

சந்தையில் நாட்டு மற்றும் வெள்ளை அரிசி வகைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், புத்தாண்னை வரவேற்கப் பால் சோறு சமைக்க முடியாத நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளதாக மரதகஹமுல அரிசி வியாபாரிகள் சங்கத்தின் உறுப்பினர் எஸ்.எஸ்.ரணசிங்க தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



## மாணவனை மிரட்டி ரூ.67,000 கொள்ளை

தனியார் வகுப்புக்கு சென்ற மாணவனைக் கத்தியைக் காட்டி கொலை மிரட்டல் விட்டு, அவரை காரில் பலவந்தமாக ஏற்றிச் சென்று 67,000 ரூபாயை கொள்ளையடித்த சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் காருடன் திங்கட்கிழமை (30) கைது செய்யப்பட்டதாக அநுராதபுரம் தலைமையக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கஹட்டகஸ்திகிலிய பிரதேசத்தில் இருந்து அனுராதபுரத்திற்கு தனியார் வகுப்புக்கு வந்த மாணவனிடம் இருந்தே, பணத்தைக் கொள்ளையடித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## தந்தையும் இளைய மகனும் தாக்கியதில் மூத்த மகன் பலி



■ எஸ்.கௌசல்யா, ரஞ்சித் ராஜபக்ஷ, துவாரஷான், நீலமேகம் பிரசாந்த்

பூண்டுலோயாவில் 45 வயதான தந்தையும் 16 வயதான இளைய மகனும் இணைந்து 25 வயதான மூத்த மகனை தடிகளால் அடித்துக் கொன்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பூண்டுலோயா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட டன்சினன் தோட்ட கீழ் பிரிவில் வசிக்கும் ஐந்து வயதுடைய பெண் பிள்ளையின் தந்தையான சிக்கன் நடேசன் நவீன் குமார் (வயது 25) என்பவரே உயிரிழந்துள்ளார்.

தொடர்ச்சி P2



## வாகரை கடற்கரையில் இந்தோனேசிய படகு

■ கனகராசா சரவணன்

மட்டக்களப்பு-வாகரை பொலிஸ் பிரிவிலுள்ள பால்சேனை கடற்கரையில் ஆளில்லா இந்தோனேசியா நாட்டுப் படகு ஒன்று கரையொதுங்கிய நிலையில் செவ்வாய்க்கிழமை (31) மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். குறித்த படகு கடலில் மிதந்து வந்து கரை தட்டியதை அடுத்து அதனை மீட்டுள்ளனர்.

## முதலாம் தரம் ஜன.30 ஆரம்பம்



அரச பாடசாலைகள் மற்றும் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளில் 2025ஆம் ஆண்டு முதலாம் தரத்தில் சேரும் புதிய மாணவர்களுக்கான சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் பாடசாலைகளில் வகுப்புகள் 2025 ஜனவரி 30 வியாழன் அன்று ஆரம்பமாகவுள்ளதாக தெரிவிக்பகட்டுள்ளது.

## தனியார் மருந்தகங்கள் மூடப்படும் அபாய நிலை



தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபையின் புதிய சட்டதிட்டங்கள் காரணமாக நாடு முழுவதும் பல்வேறு தனியார் மருந்தகங்கள் மூடப்படும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் சுமார் ஐயாயிரத்து நூறு தனியார் மருந்தகங்கள் செயற்படுகின்றன. இதுவரை காலமும் தனியார் மருந்தகம் ஒன்றை பதிவு செய்வதற்கு மட்டுமே தகுதி வாய்ந்த மருந்தாளர் ஒருவரின் பதிவுச் சான்றிதழ் தேவைப்பட்டிருந்தது.

இந்நிலையில், தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபையானது மருந்தகங்களின் செயற்பாட்டிற்கு தகுதி வாய்ந்த மருந்தாளரின் முழுநேர இருப்பை கட்டாயமாக்கியுள்ளது.

தொடர்ச்சி P2

## இரண்டு சைபர் தாக்குதல்

அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம் மற்றும் இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ YouTube கணக்கு ஆகிய இரண்டின் மீதும் சைபர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நபரொருவர் அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திற்குள் அனுமதியின்றி உட்பிரவேசித்துள்ளதாக இலங்கை கணினி அவசர நடவடிக்கை பிரிவின் சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் சாருக தமுனுபொல தெரிவித்தார். அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திற்கு தொடர்பற்ற விடயங்களை வெளியிட முயற்சித்தமையை

தொடர்ச்சி P2

## திசைக்காட்டி எம்.பிக்கள் மீது தாக்குதல்: விசாரணை ஆரம்பம்

பிங்கிரியவில் உள்ள ஆடைத் தொழிற்சாலையொன்றைப் பார்வையிடச் சென்ற தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவரைச் சுற்றி வளைத்த மக்கள் குழுவொன்று அவ்விருவர் மீதும் தாக்குதல் நடத்தியதால் அப்பகுதியில், திங்கட்கிழமை(30) பிற்பகல் பெரும் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது.

குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் விஜேசிறி பஸ்நாயக்க மற்றும் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அஜித் கிஹான் ஆகியோர் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.



இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களும் ஆடைத் தொழிற்சாலை அதிகாரிகளுடன் கலந்துரையாடிவிட்டுச் செல்லவிருந்த போதே இந்தச் சம்பவத்திற்கு முகங்கொடுத்துள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்



# உயர்நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு

அதன்படி, இப்பிரச்சினையில் நிபுணர்கள் குழு வழங்கிய பொருத்தமான பரிந்துரைகளில் ஒன்றைத் தொடருமாறும், அத்தகைய முடிவை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறும், விடைத்தாள் மதிப்பீட்டை ஆரம்பித்து முடிப்பதற்கும், முடிவுகளை இறுதி செய்வதற்கும் உயர் நீதிமன்றம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு உத்தரவிட்டது. மற்றும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகளை வெளியிடுமாறும் தீர்ப்பளித்துள்ளது.

இந்நிலையில், புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாளில் மூன்று கேள்விகளைக் கசியவிட்டிருந்தனர் என குற்றஞ்சாட்டப்பட்டுள்ள பிரேமதிலகா மூன்று மில்லியன் ரூபாவையும், இளங்க சின்ஹா இரண்டு மில்லியன் ரூபாவை அரசாங்கத்துக்கு நட்டஈடாக செலுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

2025 ஒதுக்கீட்டுச் சட்டமூலத்துக்கு

# அமைச்சரவை அங்கிகாரம்

குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரான ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# தனியார் மருந்தகங்கள் மூடப்படும் அபாய நிலை

அதன் காரணமாக, நாடு முழுவதும் உள்ள மருந்தகங்கள் மூடப்படும் அபாயத்தை எதிர்கொள்கின்றன என்று அகில இலங்கை தனியார் மருந்தக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அகில இலங்கை தனியார் மருந்தக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் சண்டிக கங்கந்த தெரிவிக்கையில்,

“தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபையின் அறிவிப்பால் ஏற்பட்டுள்ள நிலைமையைப் பற்றிக் கலந்துரையாடுவதற்காக அமைச்சர் மற்றும் தொடர்புடையவர்களை நாங்கள் கோரி வருகிறோம், ஆனால் எங்களுக்கு இன்னும் பதில் கிடைக்கவில்லை.

குறித்த முடிவினால் ஏற்பட்டுள்ள எதிர்மறையான தாக்கத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். நாடாளவிய ரீதியில் செயற்படும் மருந்தகங்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது.

பொதுமக்கள், குறிப்பாகக் கிராமப்புறங்களில் உள்ள நோயாளிகள் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றார்கள். கிராமப்புறங்களில் உள்ள மருந்தகங்கள் மூடப்படுவது அப்பகுதிகளில் பொதுமக்களின் ஆரோக்கியத்திற்கு இடையூறாக அமையக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

ஏனெனில், மக்கள் மருந்துகளைப் பெறுவதற்கு கொழும்பு உள்ளிட்ட பிரதான நகரங்களுக்குச் செல்ல வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

ஆகவே, இந்த விடயத்தில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாவிட்டால் இந்தப் பிரச்சினைகள் தொடர்ந்து மோசமடையும் ஆபத்துள்ளது.

மருந்தாளரின் பதிவு முறையை அகற்றுவதல்ல எமது கோரிக்கை தகுதி வாய்ந்த மருந்தாளர்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதே எமது கோரிக்கையாகும்.

நாடு முழுவதும் தற்போது செயற்பாட்டில் உள்ள 5,100 மருந்தகங்களில் தகுதி வாய்ந்த மருந்தாளர்கள் பற்றாக்குறையால் பல மருந்தகங்கள் மூடப்படும் நிலைமையில் உள்ளன.

> **“ தகுதி வாய்ந்த மருந்தாளர்களைப் பணியமர்த்துவதற்கான தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபையின் எதிர்பார்ப்பு நியாயமானதாக இருந்தாலும் தற்போதைய சூழ்நிலையில் அது சாத்தியமில்லை. மருந்தாளர்களுக்கான தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபையின் விண்ணப்பத்தில், இலங்கை மருத்துவக் கவுன்சிலால் வழங்கப்படும் மருந்தாளர் தகுதி அல்லது செயல் திறன் சான்றிதழ் அவசியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.**

அத்தோடு தகுதி வாய்ந்த நபர்கள் வெளியேறுவதால் நாட்டில் மருந்தாளர்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. நவம்பர் மாத நிலவரப்படி, இலங்கை மருத்துவ கவுன்சிலின் மீளாய்வுக்கு அமைவாக 6,700 மருந்தாளர்கள் மட்டுமே செயற்பாட்டில் உள்ளனர்.

தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபை சட்டத்தின்படி, மருந்துகள், மருத்துவ சாதனங்கள் அல்லது தயாரிப்புகளை விநியோகிப்பது ஒரு மருந்தாளர் அல்லது ஒரு பதிவுசெய்யப்பட்ட பயிற்சி மருந்தாளரால் தலைமை மருந்தாளரின் நேரடி மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றுள்ளது.

தகுதி வாய்ந்த மருந்தாளர்களைப் பணியமர்த்துவதற்கான தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபையின் எதிர்பார்ப்பு நியாயமானதாக இருந்தாலும் தற்போதைய சூழ்நிலையில் அது சாத்தியமில்லை.

மருந்தாளர்களுக்கான தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபையின் விண்ணப்பத்தில், இலங்கை மருத்துவக் கவுன்சிலால் வழங்கப்படும் மருந்தாளர் தகுதி அல்லது செயல் திறன் சான்றிதழ் அவசியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இருப்பினும், மருந்தாளர்களுக்கான அரசாங்கத்தின் பரீட்சையில் தேர்வில் 5 சத வீமானவர்களே தேர்ச்சி பெறுகிறார்கள்” என குறிப்பிட்டுள்ளார்.

# பாற்சோறு இல்லாத புத்தாண்டு

சந்தையில் உள்ளூர் அரிசி வகைகளுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுகிறது. குறிப்பாக பால் சோறு தயாரிக்கும் வெள்ளை அரிசிக்கு பாரிய தட்டுப்பாடு நிலவுகிறது என்றும் அவர் கூறியுள்ளார்.

வெள்ளை அரிசிக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக மக்கள் இம்முறை புத்தாண்டை வரவேற்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

அரிசிக்கு நாட்டில் ஏற்பட்ட கடும் தட்டுப்பாடு காரணமாக இந்தியாவில் இருந்து 70ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்ய அரசாங்கம் அனுமதியளித்தது. இறக்குமதி செய்யும் அரிசிக்கு கட்டுப்பாட்டு விலையும் விதிக்கப்பட்டது. அதன் பிரகாரம் மக்கள் அதிகம் நுகரும் நாட்டரிசியை 225 ரூபா என்ற சில்லறை விலைக்கு மொத்த வியாபாரிகள் வழங்க வேண்டும் என்றும் நாட்டரிசியை 230 ரூபா என்ற அதிகபட்ச சில்லறை விலையில் விற்பனை செய்யும் வகையிலான வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டது.

ஆனால், 225 ரூபா என்ற சில்லறை விலையில் அரிசியை பெற்று 230 ரூபாவுக்கு விற்பனை செய்ய முடியாதென வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர். அதனால் பெரும்பாலான வர்த்தகர்கள் அரிசியை கொள்வனவு செய்யவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது




# முல்லைத்தீவு முகாம் தடுப்பு மையமானது

இலங்கை விமானப்படை முல்லைத்தீவு முகாமை “தடுப்பு மையமாக” பிரகடனப்படுத்தும் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் திங்கட்கிழமை (30) வெளியிடப்பட்டுள்ளது.

இந்த வர்த்தமானி அறிவித்தல் பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபாலவின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டது. முல்லைத்தீவு விமானப்படைத் தளம் தடுப்பு முகாமாக செவ்வாய்க்கிழமை (31) முதல் இயங்கவுள்ளது.

கடற்படையினரால் அண்மையில் மீட்கப்பட்ட 103 மியன்மார் அகதிகள் முல்லைத்தீவில் உள்ள விமானப்படை முகாமுக்குத் தற்காலிக காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நீதிமன்ற உத்தரவுக்கமைய மிரிஹான தடுப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்த போதிலும், மிரிஹான தடுப்பு முகாமில் போதிய தங்குமிட வசதிகள் இல்லாததால், இந்த அகதிகளை முல்லைத்தீவு விமானப்படைத் தளத்திற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# மாணவனை மிரட்டி ரூ.67,000 கொள்ளை

விஜய புர பிரதேசத்தை சேர்ந்த 29 வயதுடைய ஒருவரும், ஹிடோகம பஹல் தருவில பிரதேசத்தை சேர்ந்த 35 வயதான ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

தனியார் வகுப்புகள் முடிந்ததும் அநுராதபுரம் புதிய நகரில் பஸ்ஸுக்காக காத்திருந்த 18 வயதுடைய மாணவன் அருகில் காரில் வந்த நின்றுள்ளது. அதில் இருந்த நான்கு பேர் கத்தியைக் காட்டி மாணவனை, காருக்குள் பலவந்தமாக ஏற்றிக்கொண்டு, ஆள் நடமாட்டமற்ற இடத்திற்கு அழைத்துச் சென்று, அவரிடமிருந்த 2000 ரூபாய் பணத்தை அபகரித்ததுடன், வங்கி அட்டையையும் கைப்பற்றினர். .

அதன்பின்னர், வங்கி தன்னியக்க இயந்திரம் இருக்கும் இடத்துக்கு சென்றவர்கள், அந்த மாணவனை அச்சுறுத்தி, இரகசிய இலக்கத்தை கேட்டு, வங்கி அட்டையில் இருந்து 65000 ரூபாவை வலுக்கட்டாயமாக எடுத்துக்கொண்டு, மாணவனை சிறிது தூரத்தில் இறக்கிவிட்டுவிட்டு காருடன் தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# திசைக்காட்டி எம்.பிக்கள் மீது தாக்குதல்: விசாரணை ஆரம்பம்

எம்.பிக்கள் சென்ற இரு வாகனங்களையும் சுற்றிவளைத்த மக்கள், அவர்களையும் தாக்கியதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

ஆடைத் தொழிற்சாலையின் அதிகாரிகள் குழுவைச் சந்தித்து இருவரும் வெளியேற்ற முற்பட்ட போது, குழுவொன்று சுமார் அரை மணித்தியாலம் இருவரையும் சுற்றி வளைத்து ஆவேசமான வார்த்தைகளைக் கூறி அவர்களுக்கு எதிராகப் போராட்டம் நடத்தியதுடன், வன்முறையில் ஈடுபடத் தொடங்கியதாகக் கூறப்படுகிறது.

தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்ததால் எங்களை ஏன் இப்படிச் செய்கிறார்கள் என்று திட்டியதாகத் தெரிகிறது.

சம்பவத்தின் பின்னர் பிங்கிரிய பொலிஸ் அதிகாரிகள் குழுவொன்று அங்கு சென்று இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களையும் பத்திரமாக அனுப்பி வைக்க நடவடிக்கை எடுத்ததாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

எம்.பிக்களின் ஓட்டுனர்கள் மீதும் கலவரக்காரர்கள் குற்றம் சாட்டியதாக அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் விஜேசிறி இது தொடர்பில் குளியாபிட்டிய பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரிடம் முறைப்பாடு செய்துள்ளார். அந்த முறைப்பாடு தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தேசிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் விஜேசிறி பஸ்நாயக்கவிடம் விஜேசிறி பஸ்நாயக்கவிடம் நடத்திய விசாரணையில், ஆடைத்தொழிற்சாலையின் தலைவர்களுடன் தாம் கலந்துரையாடிக் கொண்டிருந்த போது, ஆத்திரமடைந்த சிலர் தனது சட்டையின் காலரை இழுத்துத் தாக்கியதாகத் தெரிவித்துள்ளார்.

தன்னுடன் அங்குச் சென்ற புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அஜித் கிஹானையும் அந்த குழுவினர் துன்புறுத்தியதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

# இரண்டு சைபர் தாக்குதல்

அடுத்து இந்த விடயம் அவதானிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்நிலையில், இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ YouTube கணக்கு சைபர் தாக்குதலுக்குள்ளாகியுள்ளது.

தற்போது அந்த கணக்கின் நிர்வாகம் முழுமையாக அதன் நிர்வாகிகளினால்(Admin) இழக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு கூறியுள்ளது.

திங்கட்கிழமை (30) இரவு 7.30 அளவில் இந்த சைபர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது குறித்த YouTube கணக்கை வழமைக்குக் கொண்டுவருவதற்கு தேவையான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தந்தையும் இளைய மகனும் தாக்கியதில் மூத்த மகன் பலி

சம்பவ தினமான திங்கட்கிழமை (30) அன்று இரவு, தந்தையும் மூத்த மகனும் அதிகமாக மது அருந்தி இருந்தனர். தந்தை வீட்டிற்கு வந்தபோது, மூத்த மகன் வீட்டில் இருக்கும் பாடல்கள் கேட்கும் சாதனத்தில் அதிக ஒலி எழுப்பிப் பாடல்களைக் கேட்டுக் கொண்டிருந்தார். அப்போது, ஒலியைக் குறைக்குமாறு மகனிடம் தந்தை கேட்டிருக்கின்றார்.

எனினும், கோபமடைந்த மகன் ஒலியைக் குறைக்காது தந்தையை தாக்கியுள்ளார். அப்போது, தந்தை கீழே விழுந்துவிட்டார். ஓடோடி சென்ற மகன், பெரிய கல்லொன்றை எடுத்து தந்தையின் நெஞ்சு பகுதியில் போட்டுள்ளார்.

அதை பார்த்துக்கொண்டிருந்த இளைய மகன், அண்ணாவைத் தாக்கியுள்ளார். அப்போது எழுந்த தந்தையும் பொல்லால், மூத்த மகனைத் தாக்கியுள்ளார். இருவரும் இணைந்து தாக்கியதில், அந்த இளைஞன் ஸ்தலத்திலேயே மரணமடைந்துள்ளார்.

இந்நிலையில், மூத்த மகன் (கொல்லப்பட்டவர்) தாக்கியதில் காயமடைந்த தந்தையும் இளைய மகனும் கொத்மலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும், சந்தேக நபர்கள் இருவரும் பொலிஸ் பாதுகாப்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் பிரதான பொலிஸ் பரிசோதகர் சுகத் தெரிவித்துள்ளார்.

படுகொலை செய்யப்பட்ட ஒரு பிள்ளையின் தந்தையின் சடலம் நீதவான் பரிசோதனையின் பின்னர் பிரேத பரிசோதனைக்காக நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

# சிகரெட் மற்றும் விஸ்கி கடத்திய வர்த்தகர் கைது

சுமார் 10 மில்லியன் ரூபாய் பெறுமதி மிக்க வெளிநாட்டு சிகரெட் மற்றும் விஸ்கியை கடத்தியதற்காக 45 வயதுடைய வர்த்தகர் ஒருவர் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் (BIA) செவ்வாய்க்கிழமை (31) காலை விமான நிலைய பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர் கொழும்பு 14, பிரின்ஸ் ஒப் வேல்ஸ் வீதியை வசிப்பிடமாகக் கொண்டவர் என்பதுடன் வர்த்தக அடிக்கடி விமானப் பயணத்தில் ஈடுபடுபவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர் ஐந்து பயணப் பைகளுக்குள் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட சிகரெட் பிராண்டுகள் மற்றும் 125 போத்தல்கள் இறக்குமதி செய்யப்பட்ட மது வகைகளும் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் இலங்கையின் பல்வேறு மாகாணங்களில் உள்ள மதுபானக் கடைகள் மற்றும் உணவகங்களில் இந்தப் பொருட்கள் விற்பனை செய்யப்படவிருந்ததாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.



# “புதிய நம்பிக்கை நிறைந்த புத்தாண்டு”

நாடும் நாட்டு மக்களும் பல தசாப்த காலமாகக் கண்ட நல்ல கனவுகள் நனவாகும் புதிய யுகத்தின் உதயத்துடன், 2025 புத்தாண்டில் இலங்கையர்களாகிய நாம் அடியெடுத்து வைக்கின்றோம் என்று தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ள ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, புதிய நம்பிக்கையும் நிறைந்த புத்தாண்டாக அமையட்டும் என்றும் தெரிவித்துள்ளார். .

வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு ஆகிய நான்கு திசைகளையும் இணைத்து அனைத்து மக்களின் நம்பிக்கையையும் பெற்று 2024ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியமைக்க எம்மால் முடிந்தது. அதற்கிணங்க, மக்கள் எதிர்பார்க்கும் சிறந்த ஆட்சியொன்றை உருவாக்கும் நோக்கில் அன்றிருந்த அரசியல் கலாசாரத்தில் பாரிய மாற்றத்தை மேற்கொண்டு, மக்கள் ஆணையின் பொறுப்புக்கூறல் மற்றும் பொறுப்பை நிறைவேற்றுவதற்கு நாம் தற்போது துரிதமாகச் செயற்பட்டு வருகின்றோம்.

கிராமிய வறுமையை ஒழித்தல், ‘கிளீன் ஸ்ரீலங்கா’ திட்டம் மற்றும் டிஜிட்டல் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புதல் ஆகியவை நாட்டின் முன்னணி அபிவிருத்தித் தேவைகளாக நாம் அடையாளம் கண்டுள்ளோம். அந்தப் பின்னணியில் சமூக, சுற்றாடல் மற்றும் நெறிமுறை புத்தெழுச்சியின் ஊடாக சமூகத்தை மேலும் மேம்பட்ட நிலைக்கு உயர்த்தும் நோக்கில் “கீளீன் ஸ்ரீலங்கா” வேலைத்திட்டம் புத்தாண்டு உதயத்துடன் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இந்த பரிமாற்ற ரீதியான அபிவிருத்திச் செயற்பாடுகளின் ஊடாக நாடென்ற ரீதியில் நாம் 2024 ஆம் ஆண்டில் நாம் அடைந்த பொருளாதார ஸ்திரத்தன்மையை மேலும் உறுதிப்படுத்த இருக்கிறோம். அனைவருக்கும் “வளமான நாடு - அழகான வாழ்வை” பெற்றுக் கொடுப்பதற்காக புதிய மனப்பாங்குகளை மேம்படுத்தி,புதிய உறுதிப்பாடுகளை மனதில் கொண்டு சகோதரத்துவத்துடன் முன்னோக்கி வருவதற்கு 2025 புதுவருட உதயத்துடன் சிறந்த வாய்ப்பு உருவாகியிருப்பதாக நான் உறுதியாக நம்புகிறேன்.

சுதந்திரத்தின் பின்னர் இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக மக்கள் நேய அரசாங்கத்தை உருவாக்கி, அனைத்து மக்களும் ஒன்றிணைந்த அபிவிருத்தியடைந்த இலங்கை பற்றிய கனவை நனவாக்கும் வாய்ப்பு உங்களுக்கும் எமக்கும் கிடைத்துள்ளது. விட்டுக்கொடுக்க முடியாத இந்தப் பாரிய பொறுப்பு நம் அனைவரின் தோள்களிலும் சுமத்தப்பட்டுள்ளது. அந்தப் பொறுப்பு குறித்து எங்களுக்கு நல்ல புரிதல் உள்ளது. இந்த நூற்றாண்டின் தவறவிட்ட சாதனைகளை மீண்டும் நாட்டுக்கு வென்று கொடுக்கவும் மக்களின் கனவுகளை நனவாக்கவும், 2025ஆம் ஆண்டு புத்தாண்டில் மேலும் வீரியத்துடனும் உறுதியுடனும் அர்ப்பணிக்க நடவடிக்கை எடுப்போம்.

தேசிய மறுமலர்ச்சிக்காக எங்களுடன் இணைந்து பங்காற்றும் உங்கள் அனைவருக்கும் செழுமையும் ஒற்றுமையும் புதிய நம்பிக்கையும் நிறைந்த புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.



# “8 மணிநேர வீட்டு வேலைக்கு 2,000 ரூபாய்”

**கனகராசா சரவணன்**

மட்டக்களப்பில் வீட்டு வேலை தொழிலாளர்களின் அடிப்படை சம்பளம் ஒரு நாளில் 8 மணித்தியாலத்திற்கு 2,000 ரூபாவாக நிர்ணயித்து அது தொடர்பான சம்பளம் பட்டியல் ஒன்றை வீட்டு வேலை தொழிலாளர் சங்கம் செவ்வாய்க்கிழமை(31) வெளியிட்டுள்ளது.

மட்டக்களப்பு டயஸ் லேனிலுள்ள வீட்டு வேலை தொழிலாளர் சங்க காரியாலயத்தில் செவ்வாய்க்கிழமை (31) இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில், சம்பள பட்டியலை சங்க செயலாளர் மற்றும் உறுப்பினர்கள் வெளியிட்டனர். இதன் போது அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

“மாவட்டத்தில் 450 மேற்பட்ட வீட்டு வேலை தொழிலாளர்கள் சங்க உறுப்பினர்களாக இருந்து வருகின்றனர் இந்த நிலையில் வீட்டு வேலை தொழிலாளர்களுக்குத் தொழில் வழங்குபவர்கள் ஒரு வேலைக்கு



அழைத்து ஏனைய வேலைகளை வாங்கிக் கொண்டு அவர்களின் உழைப்புக்கு ஏற்ற சம்பளங்களை வழங்காது சாப்பாட்டு பார்சலை வழங்கி அத்துடன் குறைந்த ஊதியத்தை வழங்கி அவர்களை அவமதித்து நடத்தி வருகின்றனர். இவ்வாறு வீட்டு வேலை தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே அவர்களின் உழைப்புக்கு ஏற்ற சம்பளம் பெற்றுக் கொள்வதற்காக சம்பள பட்டியல் ஒன்றை நிர்ணயித்துள்ளோம்.

அதற்கமைய 8 மணி நேர வேலைக்கு 2,000 ரூபாவும், 4 மணித்தியால வேலைக்கு 1,500 ரூபாவும், ஒரு மணி நேர வேலைக்கு 500 ரூபாவும், 8 மணித்தியாலத்திற்கு மேல் வேலை செய்தால் ஒரு மணித்தியாலத்திற்கு 250 ரூபாவும்,

தங்கி வேலை செய்வோருக்கு மாதாந்தம் 50,000 ரூபாவும் தொழில்

வழங்குபவர்கள் வழங்கப்பட வேண்டும் என சம்பள பட்டியல் ஒன்றை நிர்ணயித்து அதைத் துண்டு பிரசுரம் மூலம் பொது இடங்களில் விநியோகிக்க உள்ளோம்.

எனவே, எமது சங்கம் கண்டியை தலைமையுமாக கொண்டு பல மாவட்டங்களில் இயங்கி வருகிறது. இந்த சங்கத்தில் உள்ள வீட்டு வேலை தொழிலாளர்களின் உரிமை மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்தவே செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம் எனவே இந்த சங்கத்தில் வீட்டு வேலை தொழிலாளர்கள் இணைந்து கொள்ளமுடியும்” என்றனர்.

இதையடுத்து சம்பள பட்டியல் துண்டு பிரசுரத்தை மண்முனை வடக்கு பிரதேச செயலாளரிடம் கையளித்து, வெளியீட்டு வைத்த பின்னர் துண்டு பிரசுரங்களைப் பொதுமக்களிடம் விநியோகித்துள்ளனர்.

# “நம்பிக்கை வலுவூட்டும் ஆண்டு”

“மலரும் 2025ஆம் ஆண்டு நம்பிக்கை நிறைந்த ஆண்டாகத் திகழட்டும் மலையக மக்களின் தேவைகளிலும், அவர்களது முயற்சிகளிலும் நாம் கைகொடுப்போம்” என இ.தொ.கா. பொதுச் செயலாளரும், நுவரெலியா மாவட் பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமானின் தனது 2025 புத்தாண்டு வாழ்த்து செய்தியில் தெரிவித்துள்ளார்.

மேலும், பிறக்கின்ற ஒவ்வொரு புத்தாண்டும் மாற்றங்களையும். முன்னேற்றங்களையும் தரவேண்டும் என்ற எதிர்பார்ப்பு ஒவ்வொருவருக்குள்ளும் உண்டு. மலையக சமூகத்தின் மாற்றத்திற்காகவும், ஏற்றத்திற்காகவும் தம்மை அர்ப்பணித்திருக்கும் இ.தொ.கா. எத்தனை சவால்களை எதிர்கொண்டாலும் இடைவிடாது மக்களுக்காகப் பாடுபடும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

எமது மலையக மக்கள் இடர்களை எதிர்கொள்ளும் போதும், சவால்களைச் சந்திக்கின்ற போதும் அரணாகப் பாதுகாத்து நின்று துயர்களையும் துடைத்து வந்திருக்கின்றோம். வரலாற்றுப் பணியை நாம் மேற்கொண்டிருப்பதை வரலாறு சான்றுபடுத்தும். இதன் காரணமாகவே, தெளிந்த சிந்தனையோடும். கொள்கைப்பற்றோடும் மக்கள் எம்பின்னால் அணிவகுத்து நிற்கின்றனர்.

இன்று எம்மக்கள் அனைவருக்கும் சலுகைகள், உரிமைகள், வசதி வாய்ப்புகள் என்பன, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் அத்தனையும் அரசியல் சாணக்கியத்தாலும், தொழிற்சங்க போராட்டங்களாலும் பெறப்பட்டவை என்பதை எவரும் மறந்துவிட முடியாது. 2025ஆம் ஆண்டு நம்பிக்கை வலுவூட்டும் ஆண்டாகவும். மலையக மக்களின் தேவைகளை நிறைவேற்ற வழிகாட்டும் ஆண்டாகவும் திகழவேண்டும். இம்மக்களின் தேவைகளிலும், அவர்களது முயற்சிகளிலும் நாம் கைகொடுப்போம். புதிய ஆண்டில் மலையகமெங்கும் மகிழ்ச்சி பரவட்டும்.

இதேவேளை இன்றைய இளைஞர்கள், நாளைய தலைவர்கள். இவர்களின் எதிர்பார்ப்புகள், விருப்பங்கள், வாஞ்சைகள் இவ்வாண்டிலேயே நிறைவேற்றப்பட வேண்டும்.

இந்த ஆண்டு இளைஞர்களுடைய ஆண்டு. புதிய சகாப்தத்தைப் படைக்கப் போகும் இந்த அரசாங்கம் இளைஞர்களின் எண்ணங்களை நிறைவேற்றி நம்பிக்கை வலுவூட்டும் ஆண்டாக இந்த ஆண்டை நாம் எதிர்பார்க்கி ன்றோம் என்றும் குறிப்பிட் டுள்ளார்.



# “ஒற்றுமையுடன் பயணிப்போம்”

“புத்தாண்டில் அடியெடுத்து வைக்கும் இந்த வேளையில், அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஆண்டு வடக்கு மக்கள் ஒவ்வொருவருக்கும் முன்னேற்றத்தைக் கொண்டுவரட்டும் என்று வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், தனது 2025 புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

மேலும், புத்தாண்டு என்பது தனியே கொண்டாட்டத்துக்கான நேரம் மட்டுமல்ல எங்கள் சிந்தனைகளைப் புதுப்பித்தலுக்கான தருணமும் கூட.

மகிழ்வுடன் வரவேற்கும் புதிய ஆண்டில் ‘முறைமை மாற்றத்தை’ நாம், எம்மில் ஒவ்வொருவரிடமிருந்தும் ஆரம்பிக்க வேண்டும் என்று விரும்புகிறேன்.

எங்கள் நிர்வாகத்தின் முதுகெலும்பாக, மக்களின் நம்பிக்கையை வளர்ப்பதிலும் - அவர்களின் வாழ்க்கையை மேம்படுத்தும் சேவைகளை வழங்குவதிலும் அரச பணியாளர்கள் ஒவ்வொருவரினதும் அர்ப்பணிப்பும் தொழில் முறையும் மிக முக்கியமானவை. நேர்மை, செயல்திறன் மற்றும் பொறுப்புணர்வோடு உங்கள் விலைமதிப்பற்ற சேவைப் பங்களிப்புகளைத் தொடரவேண்டும் என அன்புரிமையுடன் கோருகின்றேன். பொதுச் சேவையில் மிக உயர்ந்த தரங்களை நிலைநிறுத்த நாங்கள் ஒன்றாகப்பாடுபடுவோம். எங்கள் மக்கள் அனைவருக்கும் வளமான எதிர்காலத்தை உருவாக்க அயராது உழைப்போம்.

புதிய ஆண்டிலிருந்து எங்கள் பொதுச்சேவையை அன்பானதும், விரைவானதும், தரமானதுமாக மாற்றுவதற்கு நாம் ஒவ்வொருவரும் உறுதி பூண்டு ‘முறைமை மாற்றத்தை’ ஆரம்பிப்போம்.

இந்த ஆண்டை எமது மாகாணத்துக்கு, ஒரு குறிப்பிடத்தக்க இலக்கை அடைவதற்கான ஆண்டாக மாற்ற, அரசியல் தலைமைத்துவத்தில் உள்ளவர்கள், அரச பணியாளர்கள், மக்கள் என நாம் அனைவரும் ஒற்றுமையுடன் பயணிப்போம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.



# “நாமத்தை மிளிர செய்வதற்கு ஒன்றிணைந்து செயலாற்றுவோம்”

இலங்கையர்களான எங்களுக்கு கடந்த 2024ஆம் ஆண்டு உண்மையில் மாற்றத்தை ஏற்படுத்திய ஆண்டாகும். பேதங்கள் இன்றி ஒன்றாக இணைந்து தூய்மையான மற்றும் மக்களை மையப்படுத்திய அரசியல் கலாசார மாற்றத்தை இந்த நாட்டு மக்கள் தெரிவு செய்துள்ளனர் என்று பிரதமர் கலாநிதி ஹரின் அமரசூரிய தனது 2025 புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

பொறுப்பு வாய்ந்த அரசாங்கம் என்ற அடிப்படையில், பொருளாதாரம், தொழிற்துறை மற்றும் கல்வி உள்ளிட்ட பல்வேறு முக்கிய துறைகளின் ஊடாக நாட்டை கட்டியெழுப்புவதில் நாம் கடமைப்பட்டுள்ளோம். ஒவ்வொரு பிரஜையும் இனம், பாலினம் அல்லது மதம் என்ற பேதங்களைக் கடந்து அமைதியான, சுதந்திரமான, கண்ணியமான மற்றும் பரிபூரணமான வாழ்க்கையை வாழக்கூடிய எதிர்காலத்தை உருவாக்குவதே எமது நோக்கமாகும்.

ஒரு தேசமாக ஒன்றிணைந்து செயலாற்றுவதற்குக் கடந்த காலங்களில் எமக்குப் பல சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. எனினும், குறித்த தருணங்களின் நன்மைகளை முழுவதுமாக அடைவதில் நாம் தோல்வி கண்டோம். எவ்வாறெனினும், அவ்வாறு கிடைத்துள்ள சந்தர்ப்பங்களைத் தவற விடாது அவற்றைப் பாதுகாத்துக்கொள்ள நாம் ஒன்றிணைந்து செயலாற்ற வேண்டும். இந்த நெருக்கடியான காலங்களிலும், பொதுமக்களுக்கு சேவையாற்ற அரசு அர்ப்பணிப்புடன் செயலாற்றுகிறது. முன்னேற்ற மடையும் உறுதியுடன் அனைவரும் 2025ஆம் ஆண்டில் காலடி எடுத்து வைக்க உங்களுக்கு அழைப்பு விடுக்கின்றேன்.

சுபிட்சமான எதிர்காலத்தை நோக்கிய பயணம் சவால் மிக்கதாக இருந்த போதிலும், குறித்த இலக்கை அடைவதற்கென பல்வேறு முக்கியமான நடவடிக்கைகளை நாம் ஏற்கனவே மேற்கொண்டுள்ளோம். மலர்ந்துள்ள இந்த 2025ம் ஆண்டு அனைத்து பிரஜைகளுக்கும் அமைதியும், மகிழ்ச்சியும், சுபிட்சமும் கொண்டுவரும் ஆண்டாக அமைய வேண்டுமென நான் வாழ்த்துகின்றேன்.

புத்தாண்டை வெற்றியுடன் ஆரம்பிப்பதற்கும், எமது நாட்டிற்கு நல்லதொரு எதிர்காலத்தை உருவாக்குவதற்கும் எம்முடன் இணையுமாறு புத்தாண்டை வரவேற்கும் இந்த தருணத்தில் அனைவருக்கும் நான் அழைப்பு விடுக்கின்றேன். உலகத்தின் மத்தியில் அபிமானம் மிக்க, வளமான நாடாக ‘இலங்கை’ என்ற நாமத்தை மிளிரச் செய்வதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயலாற்றுவோம்.



# “எதிர்காலத்தை வலுப்படுத்துவோம்”

நமது தாய்நாடு தற்போது எதிர்கொள்ளும் சவால்களை சரியாக அடையாளம் கண்டு, அவற்றை வெற்றிகொள்ளத் தேவையான ஆற்றல், வலிமை மற்றும் தொலைநோக்குடன் செயல்பட புது வருடத்தில் நாம் அனைவரும் உறுதி பூண வேண்டும். இலங்கை தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான திட்டத்தை நாம் மேலும் வலுப்படுத்த வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தனது 2025 புத்தாண்டு வாழ்த்து செய்தியில் தெரிவித்துள்ளார்.

மேலும், கடந்த காலத்தைப் போல, குறுகிய இன, மத கருத்துக்களால் பிளவுபட்ட அரசியல் திட்டங்கள் மீண்டும் தலைதூக்காமல் இருப்பது மிக முக்கியம். அத்துடன் கடந்த நான்கு வருடங்களாக நாட்டு மக்கள் எதிர்கொண்ட நிச்சயமற்ற தன்மை, ஏமாற்றங்களை முடிவுக்கு கொண்டுவந்து, மக்கள் தாய்நாட்டில் தங்கியிருக்க ஏதுவான பொருளாதார, அரசியல், சமூகச் சூழலை உருவாக்குவதே எமது எதிர்பார்ப்பாகும்.

இதில் நாம் செய்ய வேண்டியது அமைதியின்மையை இல்லாதொழித்து நிம்மதியை வெற்றி பெறச்செய்வதற்கான பாதையை சரியாகத் தெளிவுபடுத்திக் கொள்வதாகும். நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியால் சிதைந்துள்ள வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்ப புதிய பொருளாதார திட்டமும் செயல்முறையும் தேவை என்பது மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்தப்படுகிறது. எனவே நாட்டின் எதிர்காலத்திற்காக அரசியல், சமூக மற்றும் பொருளாதார முன்னெடுப்புகளை வலுப்படுத்த புது வருடத்தில் அர்ப்பணிப்புடன் செயல்படுவோம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.



# மலர்ந்துள்ள புத்தாண்டு மறுமலர்ச்சியை ஏற்படுத்த வேண்டும்

ஒவ்வொரு புத்தாண்டு பிறக்கும் போதும் புதுப்புது சபதங்களை எடுத்துக் கொண்டு எல்லோரும் ஓடிக்கொண்டே இருப்பர். அவ்வருடத்தின் இறுதியில் சிலர் இலக்கை அடைந்து விடுவர். இன்னும் சிலர், இடையில் விட்டுவிட்டுச் சோர்ந்து விடுவர். சிலர், எடுத்த சபதங்களை விடக் கூடுதலான இலக்குகளை எட்டியிருப்பர். இவற்றுக்கெல்லாம் முயற்சியே முக்கியமாகும்.

இலக்கை எட்டுவதற்கு, சோர்ந்து விடாது, இடைவிடாது முயற்சித்துக் கொண்டே இருக்க வேண்டும். ஒவ்வொருவருக்கும் தனித்தனி திறமைகள் இருக்கும். அதனை இனங்கண்டு, நெளிவு சுழிவுக்கு ஏற்ற வகையில், காய்களை நகர்த்திக் கொண்டே சென்றோம் எனில், இலக்கை இலகுவாக எட்டிக் கொள்ள முடியும். அவ்வாறானதொரு முயற்சியைப் பிறந்திருக்கும் புத்தாண்டில் ஒவ்வொருவரும் எடுக்க வேண்டும்.

2025ஆம் ஆண்டு புத்தாண்டை மகிழ்ச்சியுடன் சகலரும் வரவேற்றனர். பட்டாசு கொளுத்தியும் சமய ஆராதனைகளில் ஈடுபட்டும் வரவேற்றனர். மலர்ந்துள்ள புத்தாண்டில் நம்நாட்டு மக்கள் அனைவரும் நாட்டுப் பற்றுடன் சகல செயற்பாடுகளிலும் ஈடுபடுவார்களேயானால் நிச்சயமாக இந்தப் புத்தாண்டு எங்கள் தாய்நாட்டை ஒரு சொர்க்க பூமியாக மாற்றிவிடும் என்பதில் ஐயமே இல்லை. புதிய அரசாங்கமும், அதற்கான வேலைத் திட்டங்களைப் புத்தாண்டில் முன்னெடுக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

எவ்வாறான திட்டங்களை முன்னெடுத்தாலும், சாதாரண மக்களின் வாழ்க்கை சுமை முதலில் குறையவே வேண்டும். இல்லையேல், திட்டங்களால் எவ்விதமான பயனும் இல்லை. நாட்டில் ஏற்பட்டிருக்கும் அத்தியாவசிய பொருட்களின் தட்டுப்பாட்டுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். விலைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து, வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்த வேண்டும். ஊழல், மோசடிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

பொருளாதார பிரச்சினைக்குத் தீர்வு காண்பது மட்டுமன்றி, உருவாகியுள்ள அமைதியான சூழ்நிலையில் மூவின மக்களின் பிரச்சினைகள் என்ன என்பதை ஆட்சியாளர்கள் புரிந்து கொண்டு அவற்றை சுமுகமாகத் தீர்த்து வைப்பதற்குத் தனிப்பட்ட அரசியல் நோக்கங்களை மறந்து நாட்டின் நன்மைக்காக ஒத்துழைப்பது அவசியமாகும்.

அடுத்த தேர்தல்களில் வெற்றிபெற வேண்டும் என்ற எண்ணத்துடன் செயற்படாமல் நாட்டுக்காக தங்கள் பூரண பங்களிப்பை வழங்கினால் நிச்சயம் சகல இன மக்களிடையே ஐக்கியத்தையும் புரிந்துணர்வையும் நல்லிணக்கப்பாட்டையும் நாம் கட்டியெழுப்ப முடியும்.

புதிய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க பதவியேற்று வெறுமனே 100 நாட்கள் மட்டுமே நிறைவடைந்துள்ளன. இதற்கிடையில், சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு வேண்டும் என ஒற்றைக் காலில் நிற்பது நல்லதல்ல. யார், ஆட்சிப்பீடம் ஏறியிருந்தாலும், சகல பிரச்சினைகளையும் ஒரே நாளில் தீர்த்து வைக்க முடியாது.

எனினும், புரையோடிப் போயிருக்கும் அரசியல் பிரச்சினைகளுக்கு புதிய அரசியலமைப்பின் ஊடாக இவ்வருடத்துக்குள் தீர்வு காண்பதற்கு இயலுமாக இருக்குமாயின், நீண்ட நாள் பிரச்சினைக்குத் தீர்வு கிட்டும். அதற்கு ஆளும் கட்சியினர் மட்டுமன்றி, பாராளுமன்றத்துக்குள் இருக்கும் எதிர்க்கட்சிகளும், ஏனைய அரசியல் கட்சிகளும் பொது அமைப்புகளும் ஒத்துழைப்பு நல்க வேண்டும். அதனூடாகவே மறுமலர்ச்சியை ஏற்படுத்த வேண்டும்.




தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







வாழ்வியல் தரிசனம்

எம்மவர்களின் பொதுக் கூட்டங்கள் நடைபெறும்போது, அங்கு ஆக்ரோஷமாகப் பேசி, தங்கள் திறமையைக் காட்டிக்கொள்வார்கள். இத்தகைய கூட்டங்களின்போது, அங்குள்ள அங்கத்தினர்கள் தங்களின் பழைய பகைமைகளைக் கூட்டத்தில் காட்டிக்கொள்வதுண்டு.

வருடாந்த பொதுக்கூட்டங்களில் அங்கத்தினரிடையே பதவிகள் தெரிவுசெய்யப்படும். அப்பொழுதுதான் அவர்களின் உண்மை முகம் தெரியவரும்.

நண்பர்களாக இருந்தவர்களிடையே மனஸ்தாபங்கள் வெளிப்படும். சிலர் கோபத்துடன் வெளியேறிவிடுவார்கள். பலர் அங்கு குழுக்களாக இயங்கத் தொடங்கி விடுவார்கள். வீட்டுக்கு வீடு வாசல்படிபோல், ஊருக்கு ஊர் பொதுவாகக் கூட்டங்கள் இப்படித்தான் இப்போது நடைபெறுகின்றன. இத்தகைய கூட்டங்களைப் பார்க்கும் ஊரவர்களுக்குக் கலகலப்பாகத்தான் இருக்கும்.

ஒற்றுமையாகக் கூட்டம் கூடி, செய்ய வேண்டிய கருமங்களை வினைத்திறனுடன் செய்வதை விடுத்து, நீயா, நானா என போட்டியிடுதல், சண்டைக்கு ஆயத்தமாதல், கண்டபடி வார்த்தைகளைப் பிரயோகித்தல் போன்றவை வெட்கப்பட வேண்டியவை.

பதவிகளைக் கேட்டு, அதன் பின்னால் ஓடக்கூடாது. அது தானாக வந்தால்தான், பதவி வகிப்பவருக்கும் கௌரவம், பதவிக்குரிய பொறுப்பும் காரியங்களும் நிறைவேற்றப்படும். வெறும் பவிசுக்காகப் பதவியைப் பெறுபவர்களால் காரியங்கள் சித்தியடைவதில்லை. பொதுநல விடயங்களில் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும். அதுவே, நாகரிகமாகும்.

நன்றி-பருத்தியூர் பால.வயிரவநாதன்

# புதிய அரசாங்கத்துக்கு சவலாகப் போகும் 2025



எம்.எஸ்.எம்.ஐயூப்

இன்று பிறக்கும் 2025ஆம் ஆண்டு புத்தாண்டு வித்தியாசமானதொரு சூழலில் ஆரம்பமாகிறது. சுதந்திரத்துக்குப் பின்னர் முதன்முறையாக மேற்குடியினரின் ஆட்சி கவிழ்க்கப்பட்டு சாதாரண குடும்பமொன்றில் பிறந்த ஒருவர் ஜனாதிபதியாக பதவி ஏற்றிருக்கிறார்.

அவரது அரசாங்கத்தில் ஏனைய உறுப்பினர்களில் பெரும்பாலானோர் சாதாரண குடும்பங்களில் பிறந்து வளர்ந்தவர்களாகவே இருக்கின்றனர்.

இது வரலாற்றில் மிகவும் பலம் வாய்ந்த அரசாங்கமாகும். தனி ஒரு கட்சி விகிதாசார தேர்தல் முறையில் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைப் பெற்றிருக்கிறது. வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்களும் முன்னொரு போதும் இல்லாத அளவில் மத்திய அரசாங்கம் ஒன்றுக்கு ஆதரவு வழங்கியுள்ளனர்.

வரலாற்றில் முதன்முறையாக 22 பெண்கள் பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

புத்தாண்டில் மேலும் இரண்டு தேர்தல்கள் நடைபெறவிருக்கிறது. உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மற்றும் மாகாண சபைத் தேர்தல் அவையாகும்.

ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் தோல்வியடைந்த பிரதான அரசியல் கட்சிகள் மென்மேலும் பிரிந்து செல்லும் நிலை காணப்படுவதால் தேசிய மக்கள் சக்தியே எதிர்வரும் தேர்தல்களில் வெற்றி பெறும் போல் தெரிகிறது.

பிறந்த புத்தாண்டில் புதிய அரசாங்கம் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்குமா அல்லது அதுவும் இதுவரை பதவியிலிருந்த அரசாங்கங்களைப் போல் நாட்டை சூறையாடும் அரசியல்வாதிகளுக்கும் அதிகாரிகளுக்கும் சாதகமாகச் செயற்படுமா என்பதை இப்போதே எதிர்வு கூற முடியாது. அதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன.

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க அப்பதவியை ஏற்று சுமார் மூன்றரை மாதங்கள் கழிந்துள்ளன. புதிய பாராளுமன்றம் தெரிவு செய்யப்பட்டு ஒன்றரை மாதங்களே உருண்டோடி உள்ளன. எனவே, இந்த அரசாங்கத்தை இப்போதே எடைபோட முயல்வது நியாயமானதாக அமையாது. எனினும், பிறந்த புத்தாண்டு அரசாங்கத்தை எடைபோடும் ஆண்டாக அமையும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. தேசிய மக்கள் சக்தி கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் ஆகியவற்றின் போது, மக்களுக்கு பல்வேறு வாக்குறுதிகளை வழங்கியது. அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரித்தல், வரிப்பழுவை குறைத்தல், மின் கட்டணத்தைக் குறைத்தல், ஊழலை ஒழித்தல், போன்ற குறுகிய கால வாக்குறுதிகள் முதல் சகலருக்கும் சமமான சமூக, பொருளாதார சூழலொன்றை உருவாக்குதல் போன்ற நீண்ட கால வாக்குறுதிகளும் அவற்றில் அடங்கும்.

ஆனால், புதிதாக மக்கள் இன்னமும் எந்த ஒரு சலுகையையும் அனுபவிப்பதாகத் தெரியவில்லை. மாறாக, எதிர்பாராத வகையில் அரிசி மற்றும் தேங்காய் தட்டுப்பாடும் விலையேற்றமும் காணப்படுகிறது.

நாட்டில் முன்னர் போலவே கொலைகள் இடம்பெற்று வருகின்றன. போதைப்பொருள் கடத்தல் மற்றும் வியாபாரமும் தடையின்றி நடைபெறுகிறது. இவற்றைச் சுட்டிக்காட்டி எதிர்க்கட்சிகள் அரசாங்கத்தை விமர்சிக்கின்றன.

உண்மையிலேயே நியாயமான முறையில் அரசாங்கத்தை விமர்சிக்க இன்னும் போதிய காரணங்கள் இல்லை என்றே கூற வேண்டும். அரிசி தட்டுப்பாடு சிறு போகத்தின் குறைந்த விளைச்சலின் விளைவு என கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன கூறுகிறார்.

அதற்குப் பரிகாரம் காணத் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திற்கு கால அவகாசம் போதுமானதாக இருக்கவில்லை. வருட ஆரம்பத்தில் நிலவிய வறட்சியே தேங்காய் தட்டுப்பாட்டுக்கு காரணம் என கூறப்படுகிறது. அதற்கும் பரிகாரம் காண அரசாங்கத்திற்கு கால அவகாசம் போதுமானதாக இருக்கவில்லை.

அவற்றுக்கு கால அவகாசம் இருந்தாலும், பதுக்கலில் ஈடுபடும் பாரிய அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்கள் உள்ளிட்ட பாரிய அளவிலான வர்த்தகர்களைக் கட்டுப்படுத்தாது அரசாங்கத்தால் பொருட்களின் தட்டுப்பாட்டைத் தீர்க்க முடியாது. ஆனால், அவ்வாலை உரிமையாளர்களுக்கும் பதுக்கலைத் தடுக்க வேண்டிய அதிகாரிகளுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருக்கிறது. அவர்களிடையே கோடிக் கணக்கில் பணம் பரிமாறப்படுகிறது.

அதேவேளை, அரிசி வியாபாரத்தில் தனியார்த் துறையின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்த நெல் சந்தைப்படுத்தும் சபை போன்ற அரசுக்குச் சொந்தமான போட்டி நிறுவனங்களைப் பலப்படுத்துவதாகவே ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தேர்தலுக்கு முன்னர் கூறியிருந்தார்.

அது சாத்தியமா? அச்சபையிடம் போதியளவில் களஞ்சியசாலைகள் இல்லை என்பது பொதுவாகத் தெரிந்த விடயமாகும். தற்போது மூடப்பட்டுக் கிடக்கும் பல்வேறு பாரிய அளவிலான தொழிற்சாலைகளின் களஞ்சியசாலைகளை இதற்காகப் பயன்படுத்தப் போவதாக அரசாங்கம் கூறியிருக்கிறது.

அதற்கு பணம் வேண்டும்.

எல்லாவற்றையும் பார்க்கிலும் அரசாங்கம் எதிர்நோக்கும் பிரச்சினை அதிகார வர்க்கத்தின் தடைகளாகும்.

ஏற்கனவே இப் பிரச்சினையை அரசாங்கம் கவனத்தில் எடுத்துள்ளதாகத் தெரிகிறது. பழைய ஆட்சியாளர்களால் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் ஊழல் மலிந்த பழைய முறையைக் கைவிடத் தயாரில்லை என கடந்த வாரம் விவசாய அமைச்சர் லால் காந்த கூறியிருந்தார். அத்துடன், அவ்வாறான அதிகாரிகளுக்கு எதிராக சுனாமி ஒன்று காத்திருக்கிறது என்று அவர் எச்சரித்தார்.

இதே கருத்தைக் கைத்தொழில் அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தியும் கடந்த சனிக்கிழமை பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றும் போது தெரிவித்திருந்தார். அரசாங்கத்திற்கு மக்கள் அளித்த ஆணையின் சுபாவத்தையும் அதன் அளவையும் அறியாத அதிகாரிகள் இருப்பதாகவும் அவர்கள் அரசாங்கத்தின் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்ல தயாராக இல்லை என்றும் அவ்வாறான அதிகாரிகளுக்கு எதிராக ஆளும் கட்சி போராட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறியிருந்தார்.

அன்றே ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவும் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம், சுங்கத் திணைக்களம், விமான நிலையம் மற்றும் விமான போக்குவரத்து அதிகார சபை ஆகியவற்றின் அதிகாரிகளை சந்தித்தார்.

போதைப் பொருட்கள் மற்றும் ஏனைய தடை செய்யப்பட்ட பொருட்கள் நாட்டுக்குள் கடத்தப்பட்டு வருவதைத் தடுத்தல் மற்றும் விமான நிலையத்தில் இடம்பெறும் ஊழல், மோசடிகளைத் தடுத்தல் இந்த கலந்துரையாடலின் நோக்கமாகியது.

இப்பணிகளுக்காக அதிகாரிகள் போதிய ஒத்துழைப்பு வழங்குவதில்லை என்ற அடிப்படையில் இந்த கலந்துரையாடலின் போது ஜனாதிபதியும் கருத்து தெரிவித்தார்.

பல தசாப்தங்களாக நாட்டுக்குள் போதைப் பொருட்கள் கடத்தப்பட்டு வருகின்றன. ஆரம்பத்தில் நாட்டின் தென் பகுதிகளில் மட்டும் பரவியிருந்த போதைப் பொருட்கள் போர் முடிவடைந்ததன் பின்னர் வடக்கு கிழக்கு பிரதேசங்களிலும் பரவியிருக்கின்றன.

இவ்வளவு காலமாக அவை எவ்வாறு நாட்டுக்குள் வருகின்றன என்று விமான நிலைய மற்றும் சுங்க அதிகாரிகளுக்குத் தெரியாது என்பதை நம்ப முடியாது. பாரியளவிலான இலஞ்சம் வழங்கியே கடத்தல் காரர்கள் அவற்றைக் கொண்டு வருகிறார்கள் என்றே ஊகிக்க முடிகிறது. எனவே, அரசாங்கம் மாறினாலும் அதிகாரிகள் இதனைத் தடுக்க உணர்வுப்பூர்வமாக நடவடிக்கை எடுப்பார்கள் என்று நம்ப முடியாது.

அரசாங்கம் தேர்தலுக்கு முன்னர் வாக்குறுதி அளித்ததை போல, மின்சாரம் மற்றும் தண்ணீர் கட்டணத்தையும் எரிபொருள் விலையையும் குறைக்க வேண்டும் என்றே மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

அதேவேளை, அண்மையில் அதிகரிக்கப்பட்ட வருமான வரியைக் குறைக்க வேண்டும் என்று தொழில்சார் துறையினர் கோருகின்றனர்.

ஆயினும், அவை சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளின் பேரிலேயே அதிகரிக்கப்பட்டுள்ளன.

அரசின் மொத்த வருமானம் பாதிக்காத வகையில் அக்கட்டணங்களையும் விலைகளையும் வரிகளையும் குறைக்கலாம் என்று நாணய நிதியம் கூறுகிறது.

அவ்வாறாயின், வேறு வழியில் அரச வருமானம் அதிகரிக்கப்பட வேண்டும். நாட்டில் வரி செலுத்த வேண்டியவர்களில் மிகச் சிலரே வரி செலுத்துகிறார்கள் என்பது நீண்ட காலமாகவே தெரிந்த விடயமாகும்.

அவர்கள் வரி செலுத்துவதாக இருந்தால் மேற்படி கட்டணங்கள் மற்றும் வரிகளைக் குறைக்க முடியும்.

எனினும், பாரியளவில் வரி ஏய்ப்பவர்களுக்கும் வரி அரவிடும் அதிகாரிகளுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருப்பதாக நிதி அமைச்சின் அதிகாரிகளே இதற்கு முன்னர் கூறியிருக்கின்றனர்.

வரி அறவிடும் துறையில் இடம்பெறும் இந்த மோசடியைத் தடுப்பதற்காக வென 2014ஆம் ஆண்டு 100 கோடி ரூபாய் செலவில் 'ரமிஸ்' என்னும் வருமான நிர்வாக முகாமைத்துவ தகவல் பொறிமுறை (Revenue Administration Management Information System (RAMIS computer system) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.

ஆனால், பத்தாண்டுகள் கழிந்தும் அது இன்னமும் முறையாக இயங்குவதில்லை என கூறப்படுகிறது. அந்த பொறிமுறைக்காக பயிற்றப்பட்ட ஊழியர்கள் இல்லாமையே அதற்குக் காரணம் என்று ரணில் விக்ரமசிங்கவின் ஆட்சிக் காலத்தில் கூறப்பட்டது.


நாட்டில் இடம்பெறும் பாரியளவிலான வீண் விரயம், ஊழல் மற்றும் மோசடிகளுக்கு அரசியல்வாதிகளே எப்போதும் குற்றஞ்சாட்டப்படுகின்றனர். ஆனால், அதிகாரிகளின் உதவியின்றி அரசியல்வாதிகளால் ஊழல்களில் ஈடுபட முடியாது.

அமைச்சுகளின் செயலாளர்களினதும் கணக்காளர்களினதும் ஒத்துழைப்பின்றி அமைச்சர்களால் எந்த ஊழலையும் செய்ய முடியாது என்று நீண்ட காலமாக அமைச்சராக இருந்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த அக்டோபர் மாதம் நடைபெற்ற இலங்கை பட்டயக் கணக்காளர்கள் சங்கத்தின் 45ஆவது வருடாந்த மாநாட்டில் உரையாற்றும் போது கூறினார்.

எனவே, இன்று பிறந்த புத்தாண்டு அரசாங்கத்திற்கு பெரும் சவாலாகப் போகிறது என்றே தெரிகிறது.

## கடிதங்கள்

# தீர்வு வேண்டும்



திருகோணமலை நகர சபை பகுதிக்குட்பட்ட பிரதான வீதிகளில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லை அதிகரிப்பால் பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாக அப்பகுதி பாதசாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும் திருகோணமலை நகர்ப் பகுதியிலுள்ள வீதியில் குறித்த மாடுகளின் நடமாட்டம் அதிகரித்து வருவதால் போக்குவரத்து தடை செய்யப்படுவதுடன், விபத்து சம்பவங்களும் ஏற்படுவதாக மக்கள் குறிப்பிட்டுள்ளனர். அத்துடன், அந்த நகர்ப் பகுதியில் வீடுகளில் சேரும் குப்பை கழிவுகளை வீட்டின் முன் பகுதியில் வைத்திருப்பதால் அதனை கட்டாக்காலி மாடுகள் அங்கும் இங்கும் இழுத்து வீதியை நாசமாக்குவதாகவும் தெரிவித்துள்ளனர். எனவே, குறித்த கட்டாக்காலி மாடுகளைக் கட்டுப்படுத்துமாறு சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

- ஏ.எச் ஹஸ்பர்

# சாதனை ஏற்றம்










நிலைபேறு சுற்றுலாத்துறை மற்றும் சமூக அபிவிருத்தியில் இலங்கையின் பீகோயி பாதையின் வகிபாகத்தை வெளிக்காட்டும் சாதனை ஏற்றம் நிபுணத்துவமிக்க வழிகாட்டியான அயெஷ் புத்திகவும், மலையேற்றச் சாதனைகளைப் புரிபவரான மிச்செல்லி பின்கொவ்ஸ்கியின் சாதனை நேரத்தில் இலங்கையின் அடையாளமான நெடுந்தூர மலையேற்றப் பாதையான பீகோயிப் பாதையைக் கடந்துள்ளனர். 323 கிலோ மீற்றர் தூரத்தையும், 11,000 மீற்றருக்கும் அதிகமான உயரமும் கொண்ட முழு 22 கட்டங்களை வெறும் 10 நாள்களில் கடந்துள்ளனர்.

இதை அடைய வழமையாக மலையேறுபவர்களுக்கு வாரங்கள் செல்லும்.

தற்போது உலகத்தில் சில டசின் கணக்கானோர் மாத்திரமே இப்பாதையை பூர்த்தி செய்துள்ளனர். அறியப்பட்ட வேகமான நேரமாக அல்ராமரதன் பாதை ஓட்ட வீரரான ஹையுன் சங் சுங் தனது ஓட்டத்தை வெறும் 59 மணித்தியாலங்களில் 2023ஆம் ஆண்டு ஜனவரி 27ஆம் திகதி பூர்த்தி செய்திருந்தார். முன்னதாக இச்சாதனையை இலங்கையின் நன்கு அறியப்பட்ட மலையேற்ற வீரரான ஜோன் பீரிஸ் வைத்திருந்தார். அவர் மலையேற்றத்தை 13 நாள்களில் கடந்திருந்தார்.

அயெஷ், மிஷெல்லியும் குறித்த வேகமான மலை ஏற்றத்தை இணைந்து வடிவமைத்து பீகோயி பாதை நிறுவனத்தை அறியச் செல்லும் பொருட்டும், நிதி சேகரிக்கும் பொருட்டே மேற்கொண்டிருந்தனர். இந்நிறுவனமே இப்பயணங்களை ஒழுங்கமைக்கிறது.

அனுமதி பெற்ற வழிகாட்டியான அயெஷ் மாத்திரமே இப்பயணத்தை மூன்று தடவைகள் பூர்த்தி செய்துள்ளதுடன், மிஷெலி மாத்திரமே இப்பயணத்தை இரண்டு தடவைகள் பூர்த்தி செய்த ஒரேயொரு பெண்ணாவர்.

பாதையின் நோக்கு

இலங்கையின் மத்திய மலைநாட்டின் கலாசார செழிப்புகளையும், இயற்கை வனப்பையும் காண்பிப்பதற்காகவே பீகோயி மலை ஏற்றமானது உருவாக்கப்பட்டுள்ளது. 300 கிலோ மீற்றர் இப்பாதையானது 22 கட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளதுடன், தேயிலைத் தோட்டங்கள், அடர்ந்த பைன் மற்றும் யூக்கலிப்ட்ஸ் காடுகள், மழைக் காடுகளை உள்ளடக்கியுள்ளது. ஹந்தனவிலிருந்து ஆரம்பித்து நுவரெலியா பெட்ரோ எஸ்டேட்டில் முடிவடைகிறது.

சமூகங்களுக்கான உயிர்நாடி

பீகோயி பாதையிலுள்ள சமூகங்களுக்கு இம்மலையேற்றமானது உயிர்நாடியாகக் காணப்படுகின்றது. இச்சமூகங்களானவை சிறு வர்த்தகங்கள், தேயிலைக் கொழுந்து பறிப்பு, உள்ளூர் கைப்பொருள்களிலேயே தங்கியுள்ளது.

தங்களது பயணத்தின்போது, அயெஷ், மிஷெல் ஆகியோர் உள்ளூர் வாசிகளுடன் பயன்தரக்கூடிய கலந்துரையாடல்களில் ஈடுபட்டதுடன், சிறு கிராமக் கடைகளில் விநியோகங்களைக் கொள்வனவு செய்ததுடன், குடும்பங்களால் நிர்வகிக்கப்படும் உணவகங்களில் உணவு உட்கொண்டிருந்தனர்.

தேசிய மற்றும் உலகப் பொக்கிஷம்

தேசிய புவியியல் பயணி, கொன்டே நாஸ்ட் பயணி, பயண எழுத்தாளர்கள் பிரித்தானியச் சங்கத்தில் பீகோயி பயணமானது விருதுகளை வென்றுள்ளது.





## ஆலயத்திற்கு நிதி உதவி

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமம் மலையகத்தில் மேற்கொண்டு வரும் ஆன்மீக கல்வி சமூக நல மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பதுளை – வேவெஸ்ஸ, 3ஆவது மைல் ஶ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய புனருத்தானம் மேற்கொள்வதற்கு முதலாம் கட்ட நிதியாக 200,000 ரூபாய் பதுளையில் இயங்கிவரும் மலையக சிறுவர் இல்லத்தில் வைத்து வழங்கப்பட்டுள்ளது.

இந்த உதவியை சந்நிதியான் ஆச்சிரமம் முதல்வர் அமுத கலாசுரபி கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று கடந்த திங்கட்கிழமை(30) மாலை 5.00 மணியளவில் வழங்கி வைத்துள்ளார்.

– எஸ்.தில்லைநாதன்





## திருப்பாவை ஆரம்பம்

காரைதீவு ஸ்ரீமன் நாராயணன் ஆலயத்தில் திருப்பாவை பூஜைகள் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ மகேஸ்வரக் குருக்கள் தலைமையில் சிறப்பாக இடம்பெற்று வருகின்றன.

இந்துக்களின் திருப்பாவை பாடும் நிகழ்வு கடந்த 29 ஆம் திகதி ஆரம்பமாகி உள்ளதுடன் எதிர்வரும் 11 ஆம் திகதி நிறைவடைய உள்ளது.

– வி.ரி.சகாதேவராஜா





## புத்தாண்டு வரவேற்பு

2025ஆம் ஆண்டை வரவேற்க ஏராளமான உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் நுவரெலியாவுக்கு வருகை தந்துள்ளதாக நுவரெலியா சுற்றுலா விடுதிகள் உரிமையாளர்கள் சங்கத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அவர்கள் கடந்த கிறிஸ்மஸ் விடுமுறைக்காக நுவரெலியாவிற்கு வருகை தந்து புத்தாண்டை நுவரெலியாவில் கழிப்பதற்காகத் தங்குமிடங்களைப் பெற்றுள்ளதாகவும் நுவரெலியா நகர எல்லையில் உள்ள சுற்றுலாத் தலங்களைப் பார்வையிடுவதைக் காண முடிந்ததாகவும் குறித்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.







## பயிற்சி நெறி

கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களில் பணியாற்றும் நூலகர்கள் மற்றும் நூலக உதவியாளர்களின் வினைத்திறனை மேம்படுத்தும் பொருட்டு கிழக்கு முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி பிரிவின் பணிப்பாளர் என்.எம்.நௌபீஸ்ஸீன் அறிவுறுத்தலுக்கமைவாக செயற்கை நுண்ணறிவு கருவிகளைக் கொண்டு நூலக சேவைகளை மேம்படுத்தல் பயிற்சி நெறியானது திருகோணமலையில் உள்ள கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி பிரிவின் விரிவுரை மண்டபத்தில் திங்கட்கிழமை (30) நடைபெற்றது.

குறித்த பயிற்சி நெறிக்கு வளவாளராக கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவி நூலகர் என்.எம்.ரவிக்குமார் கடமையாற்றினார், நிகழ்வில் கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி பிரிவின் பயிற்சி உத்தியோகத்தர் மு.கா. ஸ்ரீதர் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

– அ.அச்சுதன்







## சிறுவர் நூலகம் திறப்பு விழா

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட மகிழூர் கிழக்கு கிராம உத்தியோகத்தர் அலுவலக வளாகத்தில் சிறுவர் நூலகம் ஒன்று வெள்ளிக்கிழமை (27) திறந்து வைக்கப்பட்டது.

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளர் சிவப்பிரியா வில்வரத்தினத்தின் ஆலோசனைக்கிணங்கவும், உதவி பிரதேச செயலாளர் சத்யகௌரி தரணிதரனின், வழிகாட்டுதலுக்கு அமைவாகவும் சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்களான ம.புவிதரன் , செ.சக்திநாயகம் ஆகியோரின் ஒருங்கிணைப்பினால் நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் அனுசரணையில் சிறுவர் நூலகம் உதவி பிரதேச செயலாளர் சத்யகௌரி தரணிதரனினால் திறந்து வைக்கப்பட்டது.

– வி.ரி.சகாதேவராஜா

தென்கொரியா

### தென்கொரிய முன்னாள் ஜனாதிபதியை

# கைது செய்யுமாறு உத்தரவு



தென்கொரியாவில் பதவி நீக்கம் செய்யப்பட்ட முன்னாள் ஜனாதிபதி யூன் சுக் இயோலை கைது செய்யுமாறு, அந்நாட்டு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

தென்கொரிய ஜனாதிபதியாக செயற்பட்டு வந்தவர் யூன் சுக் இயோல், கடந்த 3ஆம் திகதி நாட்டில் அவசர நிலையை பிரகடனப்படுத்தினார். இந்த அறிவிப்புக்கு எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

அத்துடன், பொதுமக்களும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனையடுத்து, அவசர நிலை உத்தரவை ஜனாதிபதி திரும்பப்பெற்றுள்ளார்.

இதனைத் தொடர்ந்து ஜனாதிபதி சுக் இயோலை பதவி நீக்கம் செய்ய எதிர்க்கட்சிகள் பாராளுமன்றத்தில் தீர்மானம் கொண்டுவந்தன.

வாக்கெடுப்பின் மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஜனாதிபதி பதவியிலிருந்து யூன் சுக் இயோல் நீக்கப்பட்டார்.

இதையடுத்து, பிரதமராக செயற்பட்டு வந்த ஹாங் டக் சோ அந்நாட்டின் இடைக்கால ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. இதையடுத்து, துணைப் பிரதமராகச் செயற்பட்டு வந்த சோய் சங் மோக் நாட்டின் இடைக்கால ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

அதேவேளை, நாட்டில் அவசர நிலையை பிரகடனப்படுத்தி கிளர்ச்சிக்கு நிகரான குற்றச் செயலில் யூன் சுக் இயோக் ஈடுபட்டாரா என்பது குறித்து மத்திய ஊழல் தடுப்பு பிரிவு வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகிறது.

இது தொடர்பான வழக்கும் சியோலில் உள்ள மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், அதிகாரத்தைத் தவறுதலாகப் பயன்படுத்தி நாட்டில் அவசர நிலையை பிரகடனப்படுத்தியதற்காக பதவி நீக்கம் செய்யப்பட்ட ஜனாதிபதி யூன் சுக் இயோலை கைது செய்யுமாறு, நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இதையடுத்து, அவர் கைது செய்யப்படுவாரா என்பது குறித்த தகவல் இதுவரை வெளியாகவில்லை.

தாய்லாந்து

### ஹோட்டலில் தீ விபத்து:

# வெளிநாட்டவர் மூவர் பலி



தாய்லாந்து தலைநகர் பேங்கொக்கின் ஹொக்சான் பகுதியில் உள்ள நட்சத்திர ஹோட்டலில் திங்கட்கிழமை (30) இரவு 10 மணியளவில் ஏற்பட்ட தீ விபத்தில் 3 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த ஹோட்டலில் 100க்கும் மேற்பட்டோர் தங்கியுள்ளனர்.

இந்நிலையில், ஹோட்டலின் 5ஆவது மாடியில் உள்ள அறையில், தீ விபத்து ஏற்பட்டுள்ளது. இந்த தீ விபத்தில் சிக்கி பெண் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். மேலும், 10க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

தகவலறிந்து விரைந்து வந்த மீட்புக்குழுவினர், படுகாயமடைந்தவர்களை மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். ஆனால், வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி மேலும் 2 பேர் உயிரிழந்தனர்.

உயிரிழந்த 3 பேரும், வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள் என தகவல் வெளியாகியுள்ளது.

எத்தியோப்பியா

### மாறி கவிழ்ந்து விபத்து:

# 64 பேர் ஸ்தலத்திலேயே பலி

எத்தியோப்பியாவில் இடம்பெற்ற வாகன விபத்தில், 64 பேர் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

எத்தியோப்பியா நாட்டின் கிராமப்புற பகுதிகளில், திருமணங்கள் போன்ற சமூக நிகழ்வுகளுக்கு பேருந்துகளை வாடகைக்கு எடுப்பதற்குப் பதிலாக லொறிகளை வாடகைக்கு எடுப்பதை மக்கள் வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

ஏனெனில், அவை மலிவு விலையில் கிடைப்பதாலும், பலரை ஏற்றிச் செல்ல முடிவதாலும், காலாசார ரீதியாக மக்கள் இவ்வாறு பயணம் மேற்கொண்டு வருகின்றனர்.

அந்த வகையில், தெற்கு எத்தியோப்பியாவின் சிடாமா பகுதியில், ஞாயிற்றுக்கிழமை (29), திருமண நிகழ்வுக்காக லொறி ஒன்றில் 70க்கும் மேற்பட்டோர் சென்று கொண்டிருந்தனர்.

அப்போது அங்கிருந்த ஆற்றுப்பாலத்தில் சென்றுகொண்டிருந்த போது கட்டுப்பாட்டை இழந்த லொறி, எதிர்பாராதவிதமாக ஆற்றில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் 64 பேர் ஸ்தலத்திலேயே உயிரிழந்தனர். மேலும், சிலர் மீட்கப்பட்டு, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் எழுவர் உயிரிழந்த நிலையில், பலி எண்ணிக்கை 71ஆக உயர்ந்துள்ளது. உயிரிழந்தவர்களில் மூவர் பெண்கள் ஆவர். மோசமான வீதியே விபத்துக்குக் காரணமாகக் கூறப்படுகிறது.

கேரளா

### கேரள செவிலிக்கு

# மரண தண்டனை



கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட கேரள செவிலி நிமிஷா பிரியாவின் மரண தண்டனையை நிறைவேற்ற அந்நாட்டு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

ஏமன் நாட்டுக்கு பணிக்குச் சென்ற கேரள செவிலி நிமிஷா பிரியா, கடந்த 2017ஆம் ஆண்டு, அந்நாட்டுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

அந்நாட்டைச் சேர்ந்தவர் ஒருவரைக் கொலை செய்து விட்டார் என்பதே அவர் மீதான குற்றச்சாட்டு. கொலைக் குற்றத்திற்காக கடந்த 2017ஆம் ஆண்டு முதல் சிறையில் இருக்கும் அவர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனுவை அந்நாட்டு உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்து விட்டது.

அந்தச் செவிலியின் தாய் தன் மகளை மீட்க ஒரு நீண்ட போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்.

இந்நிலையில், செவிலி நிமிஷா பிரியாவுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை நிறைவேற்ற ஏமன் ஜனாதிபதி ரஷாத் அல் அலிமி உத்தரவிட்டுள்ளார்.

அதன்படி, இன்னும் ஒரு மாத காலத்துக்குள் நிமிஷாவின் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படும் என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது தொடர்பாக இந்திய வெளியுறவு அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில், "நிமிஷா பிரியாவை மீட்க குடும்பத்தினர் அனைத்து வாய்ப்புகளையும் ஆராய்ந்து கொண்டிருக்கின்றனர் என்று அறிவோம். அரசாங்கம் இவ்விவகாரத்தில் அனைத்து உதவிகளையும் செய்து வருகிறது" என குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழகம்

### தடையை மீறி ஆர்ப்பாட்டம் நடத்த முயன்ற

# சீமான் கைது



தடையை மீறி ஆர்ப்பாட்டம் நடத்த முயன்ற நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமானை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சென்னை கிண்டி அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக கோட்டூர்புரத்தை சேர்ந்த ஞானசேகரன் என்பவரை பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதற்கிடையில் சென்னை உட்பட பல்வேறு மாவட்டங்களில், பெண்களுக்கு எதிராக நடக்கும் பாலியல் வன்கொடுமைகள், பாலியல் சீண்டல்களைக் கட்டுப்படுத்த தவறிய தமிழக அரசைக் கண்டித்தும், சென்னை அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டதைக் கண்டித்தும் அரசியல் கட்சிகள் போராட்டம் நடத்தி வருகின்றன.

இதையடுத்து, அண்ணா பல்கலை. மாணவி பாலியல் வன்கொடுமையைக் கண்டித்து நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் தலைமையில், செவ்வாய்க்கிழமை (31) சென்னை, வள்ளுவர் கோட்டத்தில் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு அனுமதி கேட்டிருந்த நிலையில், ஆர்ப்பாட்டத்துக்கு நுங்கம்பாக்கம் பொலிஸார் அனுமதி மறுத்துள்ளனர். அனுமதி மறுக்கப்பட்டாலும் ஆர்ப்பாட்டம் நடத்தப் போவதாக நாம் தமிழர் கட்சி சார்பில் கூறப்பட்டது.

ஆர்ப்பாட்டத்துக்கு பொலிஸார் அனுமதி மறுத்த நிலையில், நான் தமிழர் கட்சியினர் தடையை மீறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

### நியூசிலாந்துக்கெதிரான மூன்றாவது போட்டி நாளை:

# ஆறுதல் வெற்றி பெறுமா இலங்கை?



இலங்கை, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்றாவது இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டியானது வியாழக்கிழமை (02) அதிகாலை 5.45 மணிக்கு நடைபெறவுள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலிரண்டு போட்டிகளையும் வென்ற நியூசிலாந்து தொடரை ஏற்கெனவே கைப்பற்றியுள்ள நிலையில், இலங்கையின் மத்திய வரிசை தொடர்ச்சியாக இரண்டு போட்டிகளிலும் விக்கெட்டுகளை இழந்தமை கவனம் பெறுகின்றது.

அதுவும் மோசமாக இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளில் செயற்பட்ட அவிஷ்க பெர்ணாண்டோ இரண்டாவது போட்டியில் பானுக ராஜபக்ஷவைப் பிரதியிட்டமை விமர்சனத்தைச் சந்தித்தது.

அந்தவகையில், தொடர்ந்து இரண்டு தொடர்களாக இலங்கைக் குழாமில் இடம்பெற்று பதினொருவர் அணியில் இடம்பெறாத தினேஷ் சந்திமாலுக்கு வாய்ப்புக் கிடைக்கலாம். தவிர சகலதுறைவீரரான சமிந்து விக்ரமசிங்க அணியில் உள்வருவதற்கான வாய்ப்புகளும் காணப்படுகின்றன.

நியூசிலாந்தைப் பொறுத்த வரையில் தொடர் கைப்பற்றப்பட்டுள்ள நிலையில் குழாமிலுள்ள நாதன் ஸ்மித், பெவோன் ஜேக்கப்ஸ் ஆகியோருக்கு விளையாடும் வாய்ப்புக் கிடைக்கலாம்.

### சிம்பாப்வே எதிர் ஆப்கானிஸ்தான்: முதலாவது டெஸ்ட்

# வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது



சிம்பாப்வே, ஆப்கானிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், வியாழக்கிழமை (26) ஆரம்பித்து திங்கட்கிழமை (30) முடிவுக்கு வந்த முதலாவது டெஸ்ட் வெற்றி தோல்வியின்றி முடிவுக்கு வந்தது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: சிம்பாப்வே

சிம்பாப்வே: 586/10 (துடுப்பாட்டம்: ஷோன் வில்லியம்ஸ் 154, பிரயன் பென்னிட் ஆ.இ 110, கிறேய்க் எர்வின் 104, பென் கர்ரன் 68, தகுட்ஸ்வனஷே கைட்டானோ 46 ஓட்டங்கள். பந்துவீச்சு: அல்லாஹ் மொஹமட் கஸன்ஃபார் 3/127, ஸியா-உர்-றெஹ்மான் 2/101, நவீட் ஸட்ரான் 2/109, அஸ்மதுல்லாஹ் ஒமர்ஸாய் 1/66)

ஆப்கானிஸ்தான்: 699/10 (துடுப்பாட்டம்: ஹஷ்மதுல்லாஹ் ஷகிடி 246, ரஹ்மத் ஷா 234, அஃப்ஸர் ஸஸாய் 113 ஓட்டங்கள். பந்துவீச்சு: பிரயன் பென்னிட் 5/95, ஷோன் வில்லியம்ஸ் 2/145, பிளஸிங்க் முஸர்பனி 1/52, நியூமன் நையம்ஹுரி 1/82, ட்ரெவர் குவான்டு 1/142)

சிம்பாப்வே: 142/4 (பென் கர்ரன் 41, ஷோன் வில்லியம்ஸ் 35 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஸகிர் கான் 2/43, அல்லாஹ் மொஹமட் கஸன்ஃபார் 1/34)

போட்டியின் நாயகன்: ஹஷ்மதுல்லாஹ் ஷகிடி

### இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# இப்ஸ்விச் டௌணிடம் தோற்ற செல்சி

### யுனைட்டெட்டை வென்ற நியூகாசில்



இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், இப்ஸ்விச் டௌணின் மைதானத்தில் செவ்வாய்க்கிழமை (31) நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-2 என்ற கோல் கணக்கில் செல்சி தோற்றது.

இப்ஸ்விச் சார்பாக லியம் டெலப், ஓமரி ஹட்சின்சன் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இதேவேளை மன்செஸ்டர் யுனைட்டெட்டின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 2-0 என்ற கோல் கணக்கில் நியூகாசில் யுனைட்டெட் வென்றது. நியூகாசில் சார்பாக, அலெக்ஸான்டர் இஸக், ஜோலின்டன் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

# 'சிற்றியுடன் இன்னும் ஒப்பந்தப் பேச்சுக்கள் இல்லை'



இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் சிற்றியின் மத்தியகளவீரரான கெவின் டி ப்ரூனே, கழகத்துடன் இன்னும் ஒப்பந்தப் பேச்சுக்களை ஆரம்பிக்கவில்லை என உறுதிப்படுத்தியுள்ளார்.

நடப்புப் பருவகாலத்துடன் 33 வயதான டி ப்ரூனேயின் சிற்றியுடனான ஒப்பந்தம் முடிவடைகின்ற நிலையில் இன்று முதல் அவர் ஏனைய கழகங்களுடன் பேரம் பேசல்களில் ஈடுபடலாமென்பது குறிப்பிடத்தக்கது.

சிற்றியில் 2015ஆம் ஆண்டு இணைந்த டீ ப்ரூனே 269 போட்டிகளில் விளையாடி 70 கோல்களைப் பெற்றுள்ளார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 01 ஜனவரி 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.